## சுருக்கம்

கல்லூரிக் கல்வி - அரசு உதவி பெறும் கல்லூரிகள் - மதுரை சமூக அறிவியல் கல்லூரி (Madurai Institute of Social Sciences), மதுரை - தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம், 1976, பிரிவு 14-A(1)(a)-ன்படி அக்கல்லூரியை நிர்வகிக்க தனி அலுவலரை நியமனம் செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

உயர் கல்வி(டி2)த் துறை

அரசாணை(நிலை)எண் 221

நாள்:19.10.2022
சுபகிருது வருடம், ஐப்பசி 2
திருவள்ளுவராண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண்122963/ஜி2/2021, நாள் 29.09.2021, 21.02.2022 மற்றும் 19.04.2022.
2. அரசு கடித எண் 7603/டி2/2022-2, நாள் 09.06.2022
3. மதுரை சமூக அறிவியல் கல்லூரிச் செயலரிடமிருந்து பெறப்பட்ட கடித எண் MISS/HEdn/1698-2022, நாள் 21.06.2022.
4. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண்22963/ஜி2/2021, நாள் 22.08.2022.

-------

ஆணை;-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மதுரை சமூக அறிவியல் கல்லூரி நிர்வாகத்தின் மீது பெறப்பட்ட புகார்களின் அடிப்படையிலும் மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் அறிக்கையின் அடிப்படையிலும் 23.03.2021ஆம் நாளிட்ட கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல்முறை மூலம் அக்கல்லூரியில் அரசாணை (நிலை) எண் 1021, கல்வித்துறை, நாள் 02.05.1985 நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது என்றும் தற்போது அங்கு நிலவும் அசாதாரண சூழ்நிலையின் காரணமாகவும் அக்கல்லூரியை நிர்வகிப்பது பெரும் சவாலாக இருப்பதாலும் அக்கல்லூரியில் தனிஅலுவலர் நியமனத்திற்கு அனுமதி பெற்று வழங்குமாறு மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் கோரியுள்ளார் என தெரிவித்து மதுரை சமூக அறிவியல் கல்லூரிக்கு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம் 1976-ன் பிரிவு14-A (1) (a)-யை அமல்படுத்தி மதுரை, மண்டலக் கல்லூரிக் கல்வி இணைஇயக்குநர் அவர்களை தனிஅலுவலராக நியமனம் செய்து ஆணை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசிடம் கோரியிருந்தார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில், தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம், 1976, பிரிவு 14-A (1) (a)-ன்கீழ், மதுரை சமூக அறிவியல் கல்லூரி, மதுரை-க்கு (Madurai Institute of Social Sciences, Madurai) தனி அலுவலரை ஏன் நியமிக்கக்கூடாது என்பதற்கான காரணம் கேட்பு அறிவிப்பு (Show Cause Notice) கல்லூரிச் செயலருக்கு அனுப்பப்பட்டு அதுகுறித்து 15 நாட்களுக்குள் விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட, மதுரை சமூக அறிவியல் கல்லூரியின் செயலரிடமிருந்து பெறப்பட்ட விளக்க கடிதத்தில், அக்கல்லூரியில் அசாதாரண சூழ்நிலை ஏதும் நிகழாத காரணத்தினால் தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம் 1976-ன் பிரிவு 14-A(1)(a)-ன்கீழ் கல்லூரிக்கு தனி அலுவலர் நியமனத்திற்கான பரிசீலனைக்கு உட்படுத்தாமல், இவ்விளக்கத்தினை அரசு கனிவுடன் பரிசீலித்து நிர்வாகத்திற்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்கண்ட கல்லூரிச் செயலரின் விளக்கம் தொடர்பாக, மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட, கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், மதுரை சமூக அறிவியல் கல்லூரியின் முந்தைய நிர்வாகம் தொடர்பாக பெறப்பட்ட பல்வேறு தரப்பினரின் புகார் மனுக்களைத் தொடர்ந்து, அக்கல்லூரிக்கு 11.12.2020 அன்று சிறப்பு ஆய்வுக் குழுவால் சிறப்பு தணிக்கை மற்றும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு பல்வேறு சட்டவிதிமீறல்கள் கண்டறியப்பட்டு மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது என்றும் மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களின் அறிக்கையின்படி சட்ட விதிமீறல்கள் மற்றும் நிதி நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பாகவும், சார்ந்த கல்லூரியின் முந்தைய செயலரின் விளக்கக் கடிதத்தில் தக்க விளக்கம் அளிக்கவோ, உரிய ஆதாரங்களின்படி நிரூபிக்கவோ தவறியுள்ளார் என்றும் மேலும், நிர்வாகத்தின் மீது ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்ட பல்வேறு விதிமீறல்களை மறைக்கும் வண்ணம், உண்மைக்கு புறம்பான தகவல்கள் விளக்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

5. எனவே, மதுரை சமூக அறிவியல் கல்லூரி, மதுரை, செயலரின் விளக்கம் மற்றும் ஆவண நகல்கள் உண்மைக்கு மாறாக அளித்துள்ளதால், இவற்றை ஏற்பதற்கில்லை என்றும் மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் தெரிவித்தபடி, இக்கல்லூரியினை சட்ட விதிகளின் படி நிர்வகிக்க முடியாத நிலை உள்ளதால், தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம், 1976, பிரிவு 14-A(1)(a)-ன்படி, மதுரை சமூகஅறிவியல் கல்லூரி, மதுரை-க்கு, மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரை தனி அலுவலராக நியமிக்க ஆவன செய்யுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மேற்கண்ட மதுரை சமூக அறிவியல் கல்லூரி, மதுரை, செயலரின் விளக்கம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் பரிந்துரை ஆகியவற்றை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதனை ஏற்று மதுரை சமூக அறிவியல் கல்லூரி, மதுரை-ல் நிலவும் நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் அசாதாரண சூழ்நிலையினை கருத்தில் கொண்டு, அக்கல்லூரியின் மேலாண்மையை, தற்காலிகமாக இடைநீக்கம் செய்து, அக்கல்லூரி நிர்வாகத்தை ஒழுங்குபடுத்திட, மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரை தனி அலுவலராக தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம் 1976, பிரிவு 14-A(1)(a)-ன்படி ஓராண்டு காலத்திற்கு நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-15.
மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
மதுரை(கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)

பதிவுத்துறைத் தலைவர், சென்னை – 28.
மதுரை மாவட்டப் பதிவாளர், மதுரை.
கல்லூரிச் செயலர், மதுரை சமூக அறிவியல் கல்லூரி, மதுரை
பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

<u>நகல்</u>

சட்டத்துறை, சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனி செயலர், உயர்கல்வித் துறை, சென்னை–9.
இகோ/உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

19/10/22
பிரிவு அலுவலர்

19/10/22